Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

கிரேக் (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது — தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூகூ] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி ஷூ பங்குனி மீ அஉ வெள்ளிக்கிழமை (21 MAR 1958) [இல-சஅ]

## அரசியல் அடிப்படைக் கொள்கைகள்

வரலாற்று உண்மைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சமுக வளர்ச்சி பலவேறு வகைகளிலே உண்டாகி வந்திருப்பதைக் காண்கின்றோம். உலகம் எங்கும் பலவிதச் சால்புகள் இருந்து வந்துள்ளன என்பதையும் அறிகின்றோம். மனித குலம் முன்னேறிக் கொண்டு செல்கின்றதா இல்லையா என்ற கேள்விக்கு இந்தவிதமான ஆராய்ச்சி முடிபுகளே விடைகொடுக்க வேண்டியனவாகின்றன.

[ 1 ]

இல்வாழ்வான் நல்வாழ்வு நன்னெறி ஒழுக்கத்திலே தங்கியிருக்கின்றது என்று அறிஞர்கள் கூறுவார்கள். ஒரு இல்லின்கண் அரசியல் நடைபெறுகின்றது என்று சொன்னால் அது பொருந்தும் தந்தை தாய் பிள்ளைகள் சுற்றம் என்கின்ற முறையிலே இவர்கள் ஒழுங்காக ஒழுகி வரும் பொழுது அந்த இல்லத்தில் அறம் விளங்குகின்றது. அங்கு ஓங்கும் அறத்தைப்பற்றிச் சொல்லும் புலவர்கள் அதற்கு இல்லறவியல் என்று கூறுவார்கள் இல்லங்கள் பல அமைந்துள்ளன ஊர்கள். ஊர்கள் பல அமைந்துள்ளது நாடு. நாட்டினது நல்வளர்ச்சிக்குரிய முறையை அரசியல் என்று சொல்வது மரபாகும்.

நாட்டினது நல்வளர்ச்சிக்கு வேண்டியன யாவை விலக்கப்பட வேண்டியவை எவை என்பவற்றை ஆராய்ந்து செல்லுமிடத்து அரசியலுக்குரிய அடிப்படைக் கொள்கைகள் தெளிவாகத் தோன்றும்.

மக்கள் ஒருங்கு சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதற்கும் ஒவ்வொருவரைப் பாதுகாப்பதற்கும் முறைப்படி வாழ்வது சமுக வாழ்வாகும். சமுகத்தின் வளர்ச்சியைக் குறிக்கும் இயலே அரசியலாகும். இல் வாழ்வுக்கும் ஊர் வாழ்வுக்கும் நாட்டு வாழ்வுக்கும் உலக வாழ்வுக்கும் அறந்தான் அடிப்படையாகவுள்ள ஒரே ஒரு கொள்கை என்று ஞானிகள் நவில்வது மிக மிகப் பொருந்தும்.

“பழம் தமிழன்”

மேலொருவன் இல்லான் எங்கள் இறை என்று இறைவனைக் கற்பனை செய்கின்றோம். இல் வாழ்வார் அந்த இல்லத்தில் (மேலொருவன் இல்லாதன்) ஆகும் ஆற்றல் உள்ளவனாக இருக்கின்றான். ஒரு நாட்டின் ஆட்சியும் அதற்கு மேலொன்றும் இல்லாத தனி ஆற்றல் உள்ளதாய் அமைய

முத்தொள்ளாயிரக் காட்சி—1

## அருளும் மறமும் ஒருங்கே பொருந்துதல்

## பண்டைய அரசர்பாற் கண்ட பண்பு

ஸ்ரீ வ. குகசர்மா

பண்டைய அரசர்கள் அருள்கொண்ட மனமுடையவர்கள்; வீரம் பொருந்தியவர்கள், அச்சமற்றவர்கள். நளனைப்பற்றிக் கூறும்போது, “அறம் கிடந்த நெஞ்சும் அருள் ஒழுகு கண்ணும் மறங்கிடந்த திண்டோள் வலியும்” என்று நளவெண்பா எடுத்துப் பேசுகிறது. அறம், மறம் என்ற இரண்டும் ஒன்றற்கொன்று எதிரான பகுதிகள். ஆனால் இவை இரண்டின் தன்மையும் மூ கால அரசரிடத்தில் பொருந்தியிருந்தன. ஒருமுறை வீமனிடம் “அவன் மனக்கிடக்கை யாது?” எனக் கண்ணபிரான் வினவியபோது, “பிறர் தாரத்தை விரும்பக் கூடாது, பிறர் பொருளை விரும்பக்கூடாது, பிறர் வசைபாடக்கூடாது, பிறர் துன்பம் தன் துன்பமாக மதிக்கவேண்டு” மெனக் கூறுகிறான். வீமன் மாத்திரமல்ல பாண்டவர் யாவரும் இவ்விதமாகிய அறம் கிடந்த கொள்கையுடையவர்கள், அறமும் அருளும் பொருந்தியவர்களைக் கெட்டவர்கள் வருத்தப் பார்ப்பார்கள் அவ்வாறே பாண்டவர்க்கும் நடந்தது. அவர்கள் மனைவியாகிய துரோபதையைச் சபையின்முன் மானபங்கப்படுத்துகிறார்கள். வீமனின் மற உள்ளம் தூண்டப்படுகிறது. எனவே ‘வண்டாரும் குழல் பிடித்துத் துகில் உரிந்தோன் உடற்குருதி வாரியுள்ளம் உண்டாகம் குளிர்வதன்முன் இக்கரத்தாற் புனலுண்ணேன்’’ எனச் சபதஞ் செய்கிறான்.

அரசரின் இந்த மாறுபட்ட குணத்தைக் காட்டவே அவர்களுக்குக் குடையாகக் குளிர்ச்சி மிகுந்த சந்திரனையும் அரசாட்சிக்கு திகிரியாகிய வெம்மை மிக்க சூரியனையும் உவமித்தார்கள்.

மூவேந்தர்களில் ஒருவனாகிய பாண்டியன் பகைவருடன் போர்புரியச் செல்கின்றான். அவனுடன் வேல் வீரர்களும் வலிமை மிக்க யானைப்படையும் துணையாகச் செல்கின்றார்கள். வீரர்களைப்போல யானைகளும் பாண்டியரது யானைகள் பகைவர் அணியைப் பிளந்து வழியை உண்டாக்கும். அதன்வழியேவீரர்சென்று பகைவரை அழிப்பர். பகைவர்களும் சும்மா இருப்பார்களா? அவர்களும் யானைகளை ஏவுவார்கள். பாண்டியன் யானைகள் வலிமை மிக்கன ஆகையால் எதிரிகளின் களிறுகள் எண்ணில்லாமல் மாண்டுவிடுகின்றன. வீரர்களும் கொல்லப்படுகின்றனர். பாண்டியன் வெற்றி பெறுகிறான்.

வெற்றிப் பெருமிதத்தில் தனது பட்டத்து யானை மீதேறிப் பகைவர் நாட்டிற் பவனி வருகிறான். அப்போது அங்கே இறந்த வீரர்களின் மனைவிமார்கள் அக்கினியை வலம் வந்து அக்கினியில் வீழ்ந்திறப்பதைப் பார்த்தான். அவனுக்கு இயற்கையில் உள்ள அருள் மேலோங்கியது. பிறர் துன்பம் இப்போது தன் துன்பமாக உறைத்தது. உடனே கண்களில் நீர் பெருகியது. அதனைத் தன் அங்க ஆடையினாலே துடைத்துக் கொண்டான். அவன் ஏறிவந்த பட்டத்து யானையும் தன் இனத்தவரை நோக்குகிறது. களிறை இழந்த பிடிகள் புலம்பிச் சோருகின்றன. அரசனுடன் நெருங்கிப் பழகி வந்தமையால் அரசரின் வீரமும் அருளும் யானைக்கும் வந்துவிடுகிறது. புலம்புகின்ற பிடிகளைப் பார்த்த களிறும் தன் கண்களில் நீர் சோர மேலும் அக் காட்சியைப் பாராமல் தம் கண்களை மூடிக்கொள்கின்றது.

“ஏனைய பெண்டீர்
எரிமூழ்கக் கண்டுதன்
தானையாற் கண்புதைத்
[தான்
தார்வழுதி—யானையும்
புல்லார் பிடிபுலம்பத்
தன்கண் புதைத்ததே
பல்யானையட்ட களத்து”.

### வைத்திய அதிகாரிமீது நம்பிக்கையில்லை

அரசாங்க வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டி. எல். ஜே. கஹவீரமீது நம்பிக்கை இல்லை என்னும் பிரேரணை ஒன்றை அரசாங்க வைத்தியர் சங்கம நிறைவேற்றி யிருக்கிறதென அறியவருகின்றது.

அரசியல் அலை

## அரிசி வழங்குவதிலும் அரசியல் அநுதாபமா?

## அகப்பை பிடிப்பவர்கள் எங்கள் ஆட்களாய் இருக்கவேண்டுமா

அரிசிப் பங்கீட்டுமுறையொன்றுண்டு. அந்த விதமாக உள்ளூர் அரிசி வெளியூர் அரிசி வழங்குவதிலும் ஒரு முறையிருக்க வேண்டுமென்று பொதுசனம் எண்ணுகின்றது. ஆனால் அரசாங்க நடைமுறையிலே உருசிகரமான உணவுக்குரியவர்கள் ஆளுங்கட்சி அநுதாபிகள், உதவாத உணவுக்குரியவர்கள் ஆளுங் கட்சியை ஆதரிக்காத பாராளுமன்ற அங்கத்தவர்களின் தொகுதியிலுள்ளவர்கள் என்ற விபரீதம் நடைபெறுகின்றது. காரணம் சனநாயக சமுகநலக் கொளகையில் நம்பிக்கையே!

எகிப்து பிரேசில முதலிய நாடுகளிலிருந்து வரும் அரிசி பசை உண்டாக்குவதற்குரியதெனறே பலரும் கூறுவார்கள். இந்தத் தரத்து அரிசியை உணவுக்குபயோகிக்கின்றவர்களும் பலவேறு நோய்களுக்குள்ளாகின்றார்கள் எனபது பொது அபிப்பிராயம் ஆகவே இந்தத் தரத்து அரிசியை அரசாங்கம் வழங்குவதே அ[illegible] அத்தியாவசியமான[illegible]

இந்தத் தரத்து அரிசியையும் வழங்கவேண்டிய நெருக்கடியிருக்குமேயானால் இலங்கை மக்கள் யாவரும் பல வாரங்களுக்கொருமுறை இன்னற்பட வேண்டிய நிர்ப்பந்தம் நிகழக்கூடியதாகச் செய்யலாம். அதைவிட்டுப் பன்னிரண்டு திங்களும் மக்கள் வெள்ளையரிசிப் பசையாற் பசியாற்றி பிணி ஏற்றும படுபாவச் செயலை ஏன் அரசாங்கம் செய்கின்றதோ தெரியவில்லை.

#### மந்திர சபையில் மீண்டும் வாய்ச்சண்டையா?

உணவு மந்திரியார் ஒழுக்கநெறிக் கட்டுப்பாட்டை மீறிவிட்டார் என்று சில [illegible] [illegible] ராம. புற்று நோய்க்கு மேற்பூச்சுப்பூசிவிட்டு அதுமாறிவிட்டதென்று பிரதமர்எண்ணிவிட்டால் எல்லாம் நல்லாய் விளைந்து விட்டதென்பதா கருத்து?

பதில் மந்திரியார் ஒருவர் படும்பாடு கொஞ்சமல்ல. உள்ளூர் ஆட்சி ஆணையாளர் குழுவினருடன் பொருதுகின்ற பதில் மந்திரியார் தமது கட்டளையைச் செய்கைமுறையிற் கொண்டுவர இயலாது தடுமாறுவதும் பிரதமருக்கு முறையிடுவது மாய்க்கவலைப்படுகின்றார்.

#### ஒப்பந்தம் உருவாகவில்லையா?

பங்குனி பதினைந்து நியமிக்கப்பட்டநாள். எதற்கு? பண்டாரநாயக செல்வநாயகம் ஒப்பந்தத்தின்பயனாக இரு சட்ட திட்டங்கள் சமஷ்டிக் கட்சித் தலைவர்களுக்கு பரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டியதற்கு ஆனால் அன்று அத்திட்டங்கள் அககட்சிககுக் கிடைககவில்லை. மறுநாளுமில்லை. அதற்கடுத்தநாளுமில்லை. இல்லாமைக்குச் சமாதானமும் இல்லை. சட்ட திட்டங்கள் எழுதப்பெற்ற தாள் எங்கேயாவது மறைந்து விட்டதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஆ பங்குனி மீ உ௨ வெள்ளிக்கிழமை


## சைவ மகாநாடு

அரசியற்றலைவர்கள் ஆண்டுக்கு ஆண்டு மாநாடு கூட்டுவார்கள். கட்சிப் பலத்தைக் கூட்டுவதற்குரிய வழிவகைகளைத் தேடுவார்கள்; கொள்கைகளைக் காலத்துக்குக் காலம் மாற்றுவார்கள்.

ஆனல் மதங்களின் சார்பாக நடைபெறுகின்ற மகாநாடுகள் ஆத்ம ஈடேற்றத்துக்காகும் நெறியை அறிவித்து அவ்வழி ஒழுகுவதற்குப் பழகுவதையே குறிக்கோளாக அமைந்திருக்கும். இந்த வகையிலே ஈழத்தின் மிகப் பழைய சைவச் சபையும் சைவப்பெருந் தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் நற்பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றதுமாகும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் மகாநாடுகளைக் கூட்டி வருவது வழக்கம். அவ்வாறே இவ்வாண்டிலும் சித்திரைத் திங்களில் மூன்று நாட்களுக்குச் சைவப் பேரறிஞர்களின் சொற்பொழிவுகளுக்குச் சான்றோர் பலர் கூடி ஒழுங்கு செய்திருக்கிறார்கள்.

வேதசிவாகமங்களும் மெய்கண்ட சாத்திரங்களும் பன்னிரு திருமுறைளும் மக்கள் மயக்கத்திலிருந்து நீங்கி குற்றமற்றவர்களாக வருவதற்குரிய மெய்யுணர்வைத்தருவன. அறியாமையென்னும் இருள் நீங்குவதற்கு மெய்யுணர்வு பெறுவது இன்றியமையாது வேண்டப்படும். இதற்குத் திருவருள் கைகூடுதல் அத்தியாவசியம். திருவருளின் பேறாகவே சைவமகாநாடுகள் போன்ற மன்றங்கள் கூடுவதும் ஆங்கு அன்பர்கள் செம்பொருள் அறிவதும் நிகழும்.

எனவே சபையாரின் தொண்டு போற்றுதற்குரியது. தெய்வப் பணியாகவுள்ளது.

'பிறப்பென்னும் பேதைமை
நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு'

என்றபடி மெய்யுணர்தலுக்கு வேண்டிய அறிவை யூட்டும் மகாநாடு மக்களுக்காக ஆண்டுதோறும் கூடவேண்டியது முறையே

என்றும்நாம் யாவர்க்கும்
இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா
வாரு மில்லை
சென்றுநாம் சிறு தெய்வம்
சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே
சேரப்பெற்றோம்

ஒன்றினற் குறைவுடையோ
மல்லோ மென்றே
உறுபிணியார் சேறலொழிந்
திட் டோடிப்போனர்
பொன்றினர் தலைமாலை
அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிய
புண்ணியத்துளோமே.

என்று அப்பர் அடிகள் அறிவுறுத்தியபடி 'புண்ணியனை நண்ணும் புண்ணியத்தை'ப் பெறக் கூடிய மெய்யறிவைப் புகட்டும் மகாநாடுகள் இக்காலத்தில் மிகமிக அவசியமானவை. பொருள் அல்லவற்றைப் பொருள் என்று எண்ணுகின்ற வாழ்க்கையில் ஈடுபடுகின்றார்கள் மக்கள்,

'அறனறிந்து ஆன்றமைந்த
சொல்லான்எஞ் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை

என்றவாறு ஒழுக்கநெறி பூண்ட அமைச்சர்களில்லாமையால் மக்கள நல் வழியிற் செல்லும் வகையறியாது மயங்குகின்றார்கள். இந்த நிலைமையிலே ஈடேற்றத்தை நாடு அடைவதற்கு சமய வாழ்க்கையின் பயனை விளக்கும் சைவத் தொண்டர்கள் வேண்டும். மாநாடுகள் கூடி அறிஞர்கள் மெய்ப்பொருள் உண்மையைப் புகட்டல்வேண்டும். ஆகவே சபையாரின் மகாநாட்டுத் தொண்டிற் சைவ அன்பர்கள் யாவருங்கலந்து தெய்வப் பணி புரிவார்களாக.

## படைகொண்டு இயக்கத்தைஉடைப்பாராம்

உணவு மந்திரியார் இட்ட கட்டளை ஒவ்வாதது என்று ஏனைய மந்திரிமார்கள் எதிர்த்தார்கள். பொலநறுவையிலிருந்து கமக்காரரை ஊர்வலமாகக் கொணர்ந்து கொழும்புமாநகர வீதிகளின் வழிச் சென்று கோட்டன் தோட்டத்திற கூக்குரல் செய்தார்கள். அரசாங்கத்துக்கு எதிராக மந்திரிகளே ஆர்ப்பாட்டஞ் செய்ததைப்பற்றித் தலைமை அமைச்சர் கூட ஒன்றும் குறைகூறவில்லை யாழ்ப்பாணத்திலே சிங்கள 'ஸ்ரீ' பொறித்த இலக்கத் தகடுகள் விசை வண்டிகளில் இருப்பது தமிழகத்தின் மானத்தைக் களைவதாகும் என்று எண்ணி அவ்வெழுத்தை எடுத்துவிட்டுத் தமிழ் 'ஸ்ரீ' யைச் சேர்க்கப்போகின்றோம் என்று ஒரு இயக்கம் தோன்றியிருக்கின்றது. இதை அடக்குவதற்காகப் போக்குவரத்து மந்திரியார் 'படைகளை'ப் பயன்படுத்தப்போகின்றாராம். அடக்குமுறை ஆட்சியென்று சொல்லாலும் செயலாலும் அடுத்து அடுத்து மக்களின் உள்ளத்தைப் புண்படுத்தும் 'மக்கள் ஐக்கிய முன்னணி' ஆட்சியாளர்கள் சனநாயகம் சமூகநலன் என்பனவற்றைப் பற்றி எடுத்துரைத்துக் கொண்டு நயவஞ்சகமாக நாட்டை ஆளுவது மனிதகுல ஒழுக்கத்துக்கு முற்றிலும் மாறானதென்பதை நாம் எடுத்துக்கூற வேண்டியதில்லை. புறநாட்டு அரசியற்றலைவர்கள் இந் நாட்டில் நடைபெறுகின்ற சனநாயக சமூகநல ஆட்சியின் உண்மை நிலைமையை உணர்வதற்கு ... ஒரு இயக்கத்தைத் ... மக்கள் நிறுவுதல் வேண்டும்.

# வாழ்க்கை வானில்

— வளர்மதி

### முட்டுக்கட்டைபோட்டால் முன்னேற்றம் உண்டு

தொழிற்கலைக் கல்லூரி மாணுக்கர்கள் தேர்வுக்குத் தோற்ற முடியாதென்று மறுத்தார்கள். கல்வி மந்திரியார் குறுக்கிட்டார் விதிகளை மாற்றினர். மாணுக்களைத் தேர்வுக்குத் தோற்றக்கூடிய வசதிகளை உண்டாக்கினர்.

### வெற்றியடைந்தார்!

கல்லூரிக்கு நூற்றுக்கு எழுபது வீதநாட்கள் சென்றிருந்தவர்களே தேர்வுக்குத் தோற்றலாம் என்றிருந்த விதி இப்பொழுது நூற்றுக்கு ஐம்பதுவீதமாக மாற்றப்பட்டதாம். அடுத்த தேர்வுக்குமுன் மாணுக்கர்கள் எடுக்கும் 'மறுப்பு' விதியை மாற்றி நூற்றுக்கு 40 வீதம் ஆக்கும் என்று தொழிற்கலைக் கல்லூரியிற் புதிகாகப் புகவிருக்கும் மாணுக்கர்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். இன்னுஞ் சில ஆண்டுகளில் கல்லூரிக்கே செல்லாது தேர்வுக்கு இருக்கும்உரிமையை மாணுக்கர்கள் பெற முடியாதா?

### வான வெளியில் மானிட சஞ்சாரம்

விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக மனிதர்கள் வானவெளியிலும் சந்திரன் செவ்வாய் போன்ற கிரகங்களிலும் பயணஞ் செய்யக் கூடிய வசதிகள் இருக்கின்றனவென்றும் உணவின்றிச் சுவாசமின்றிப் பல நாட்கள் நடமாடுவதற்குரிய குளிகைகள் தயாரிக்கப்படுகின்றனவென்றும் செய்திகள் வெளிவருகின்றன. வானவெளிக்கு மட்டுமல்ல இப்பூமியிலே உணவின்றிச் சுவாசமின்றி வாழ்வதற்குரிய குளிகைகளை உண்டு பண்ணி விட்டால், பசிப்பிணி முதலியவற்றை மனிதன் ஒழித்துவிட முடியுமல்லவா?

சீவ சத்துக்குளிகைகளை உட்கொண்டு வாழ்வதற்கு மனிதன் பழகிவிட்டால் உணவு உண்டாக்க வேண்டியதில்லை. காற்றுள்ள வெளியிடத்திற் குடியிருக்க வேண்டியதில்லை. பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஒரு வழியாகும்.

### அரசியலை விட்டு ஆங்கில வாழ்க்கையியலுக்கு!

மூன் முதல்மந்திரியாகவிருந்து சென்ற பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்து பாராளுமன்றத்தின் பின்னணியில்இருக்க வேண்டிய விதிக்காளான சேர். யோண் கொத்தலாவலை அரசியலிலிருந்து அடியோடு விலகுகின்றாராம். விலகி இங்கிலாந்திலே வீடமைக்கின்றாராம். நாட்டின் நயத்தையே வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டிருந்தேன் என்று மூன் பன்முறை மொழிந்த இவர் புறநாட்டின் புறங்கடையில் இருந்து வாழ்வதையும் ... ராயிருந்தாலன்றி நாட்டுக்குச் சேவைசெய்ய முடியாத பிரமுகர்களிலே தலைசிறந்த கொத்தலாவலையைப் பற்றிப் பேசியென்ன? பேசாதுவிட்டென்ன!

### விசை வண்டிகளில் ஊர்காட்டிப் பலகை

கொழும்பிலும் பிற சிங்களப் பகுதிகவிலும் ஒடும் விசை (பஸ்) வண்டிகளிலிருப்பதோடு வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குப் போகும் விசை வண்டிகளிலும் ஊர்காட்டிப் பலகைகள் சிங்களத்தில் மாத்திரம் இருப்பதுபற்றி ஸ்ரீ எஸ். ஜே. வி. செல்வநாயகம் போக்குவரத்து மந்திரிக்கு எடுத்துக்காட்டினரென்றும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பலகைகள் எழுதப்படுகின்றன என்று போக்குவரத்துச் சபைத் தலைவர் சொன்னரென்றும் கூறப்படுகின்றது.

### சிங்கள 'ஸ்ரீ' இங்கு வேண்டாம்

சிங்கள 'ஸ்ரீ' பொறித்த இலக்கத் தகடுகளுடன் விசைவண்டிகள் வடக்கிலும் கிழக்கிலும் தோற்றிப் பல நாட்கள் ஆகிவிட்டன. மக்கள் இவ்வண்டிகளின் வரவை உடனடியாக எதிர்த்து மக்கள் இயக்கத்தை ஆரம்பிக்கத் தவறிவிட்டார்கள் என்று ஒருசாரார் எண்ணுகிறார்கள். ஆறின கஞ்சி பழங்கஞ்சி என்று பங்குனி இருபத்தொன்பது வரை பார்த்திருப்பது இயக்கத்துக்கு இழுக்காகும் என்று இன்னெருசாரார் கருதுகின்றனர். தலைவர்களா மக்களா இந்த எதிர்ப்பைச் செய்யப்போகின்றார்கள் என்று பிறிதொரு சாரார் கேட்கின்றார்கள்.

### சிங்கள 'சிறி' எதிர்ப்பு

இந்த மாசம் 29-ந் திகதி (29 - 3 - 58) சிங்கள 'சிறி' இயக்கம் ஆரம்பிப்பதாகத் தமிழரசுக்கட்சி தீர்மானித்துள்ளதாம்,

### உத்தியோக மொழித்துறை தரும் ஏமாற்றம்

"நியாயமான அளவு"க்குத் தமிழ்மொழி உபயோகிக்கப் படுமென்று முதல் மந்திரி காலத்துக்குக்காலம் கூறிவந்துள்ளாரேயெனினும் தமிழ் மொழியை ஒதுக்கும் செயல்கள் தொடர்ந்து செய்யப்பட்டே வந்தனவென்று பலர் கருதவேண்டியதா யிருந்தது. உத்தியோக மொழிப்பகுதித் தலைவர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் அப் பதவியிலிருந்து திடீரென் மாற்றப்பட்டாரென்னும் செய்தி இக்கருத்தை வலியுறுத்துகின்றது.

### இரண்டாவது 'சீமந்து'ச் சூளை

சீமந்து உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டுக் காங்கேசன் துறைச் சூளை பருப்பிக்கப்படவும் புத்தளத்தில் இரண்டாவது சூளையொன்றையமைக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாம். அமெரிக்கா தரும் அபிவிருத்தி நிதி உதவி இத்துறையில் உபயோகப்படுத்தப்படுமென்று இத்தொடர்பிற் குறிப்பிடப்படுகின்றது.

# ஸ்ரீ செனிவிறத்ன நியமனம்பற்றிக் கேள்விகள்

திரு. எல். ஜே. டி. எஸ். செனிவிறத்ன சர்வகலாசாலை விசாரணைச் சபை அங்கத்தவராய் நியமிக்கப்பட்டதுபற்றிப் பாராளுமன்றத்திற் சில கேள்விகளைக் கல்வி மந்திரியிடம் கேட்பதற்குக் கோப்பாய்ப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கம் முன்னறிவித்தல் கொடுத்திருக்கின்றாராம்.

(1) சர்வகலாசாலை விசாரணைச் சபையில் இடம் பெறுதற்கு திரு. செனிவிறத்ன பலவாறு தகுதியற்றவரென்று எடுத்துக் காட்டிப் பல்கலைக்கழகப் பேராசிரியசங்கம், வடமாகாணத் தலைமை ஆசிரியசங்கம் முதலிய பல சங்கங்கள் சபைகள் அவருடைய நியமனத்தை எதிர்த்தும் வேறு அங்கத்தவரை நியமிக்க வேண்டுமென்றும் கேட்டதை மந்திரி அறிவாரா? (2) திரு. செனிவிறத்னவின் கல்வித் தகுதி என்ன? (3) எந்தெந்தப் பல்கலைக் கழகங்களில் அவர் கல்வி பயின்றுள்ளார் (4) கல்வி பயின்ற பின் எந்தெந்தப் பல்கலைக் கழகங்களில் தொடர்புடையவரா யிருந்திருக்கின்றார்? (5) பூரண ஒய்வு உபகாரப் பணம் ரூபா ஈராயிரத்துடன் அரசகருமமொழிப் பகுதிக் காரியாதிகாரி என்ற முறையில் ரூபா மூவாயிரம் மாதச் சம்பளமாய்ப் பெறுகின்றாரா? (6) ஒய்வு உபகாரப் பணம் பெறுவோர் உத்தியோகம் வகிக்கும்பொழுது அவர்களின் முந்திய சம்பளத்துக்கும் ஒய்வு உபகாரப் பணத்துக்குமிடையிலுள்ள தொகையே சம்பளமாகப் பெறலாகுமென்ற விதிக்கு இது முரணானதல்லவா? (7) இவ்வாறு பூரண உதவிப் பணமும் பூரண சம்பளமும் இவர் பெறக்கூடியதாய் வந்தமை ஓர் விசேஷ ஒழுங்கின்படியா? 8) அந்த விசேஷ ஒழுங்கு செய்யப்பட்டபொழுது நிதிப் பகுதிக் காரியதரிசியாய் இவரே கடமையாற்றினரா? (9) ஒய்வு உபகாரப் பணம் பெறுவோர் மீண்டும் உத்தியோகத்திலமர்த்தப்படும்பொழுது முந்திய சம்பளத்துக்கும் ஒய்வுப் பணத்துக்குமிடையிலுள்ள வித்தியாசத்தைப் பெறுதலே விதி என்பதைத் தமது மந்திரிக்கு இவர் எடுத்துக் காட்டினரா? (10) சர்வகலாசாலை விசாரணைச் சபையிலிருந்து இவரை நீக்கி வேறு சிலரை நியமிக்கும்படிதேசாதிபதிக்குக் கல்வி மந்திரி ஆலோசனை கூறுவாரா? என்பன அக் கேள்விகளாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நேயர்கள் நெஞ்சம்

# தாதிச் சேவை தகுதி குறைந்ததா?

## [illegible]ாதிமார் சேவைக்குத் தமிழ்ப்பெண்கள் முன்வராதது ஏன்?

யாழ்ப்பாணம் மட்டக்களப்பு அனுராதபுரம் முதலிய விசேட பட்டினங்களிலே தாதிப்பயிற்சிக் கல்லூரிகள் அமைக்கும் திட்டமொன்றின்படி யாழ்ப்பாணத்தில் தாதிப்பயிற்சிக் கல்லூரி ஒன்று அமைக்கப்பெற்றுள்ளதாம. குறித்த கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் இருநூறு தாதியர்களைப் பயிற்றுவதே திட்டமாக இருந்தபோதிலும், யாழ்ப்பாணக் கல்லூரிக்கு நாற்பதுபேர் மாத்திரம் வந்துள்ளனராம் அவர்களுள் ஏழு அல்லது எட்டுப் பிள்ளைகள் மாத்திரமே தமிழ்ப்பிள்ளைகளாம். ஏழு அல்லது எட்டு என்பதே சரியல்ல என்றும்' ஐந்துபேரே தமிழ்ப் பிள்ளைகள் என்றுஞ் சொல்லப்படுகின்றது.

தாதிப்பெண்கள் மருத்துவப்பெண்கள். நோயாளர் துணைவர் (அற்றெண்டன்ற்) பலர் எங்கள் வைத்தியசாலைகளில் தேவைப்படுகின்றனராம். யாழ்ப்பாணத்தவர் இத்துறைகளிற் சேவை செய்ய முன் வருவதாக இல்லையென்று பலர் கூறுகின்றனர் சாதிப் பெண்களின் சம்பளம் உயர்தரக் கல்விபயின்ற ஆசிரியர்களின் சம்பளத்தையே ஒருவாறு ஒத்திருக்கவும, சேவை செய்யும் மனநிலையுடையோருக்குச் சிறந்த சந்தர்ப்பத்தை இச்சேவை கொடுப்பதாயிருக்கவும், இப்பயிற்சி பெறுதற்குப் போக எம்மவர் விரும்பாதிருப்பதேனோ?

கொழும்பிலுள்ள ஒரு மருத்துவசாலையில் எங்களுடைய ஓர் பெண் நோயாளி இடம்பெறவேண்டியதாயிற்று. அங்கே இருவைத்தியர்கள் மாத்திரம் தமிழர்களாயிருந்தார்கள். தாதிப் பெண்கள், நோயாளர் துணைவர் ஆகிய எவரும் தமிழ்மொழி பேசக்கூடியதாயிருக்கவில்லை. குறித்த பெண் நோயாளி, சிறிது சிங்களம் பேசக்கூடியவளாயிருந்தமையால் ஒருவாறு தம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்விக்கக்கூடியதாயிருந்தது. இப்படியிருக்கும்பொழுது மற்றொரு தமிழ்ப்பெண் நோயாளி மேற்படி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டாவாம் அவவுக்குச் சிங்களம் சிறிதும் தெரியாது. அவ தம்முடைய தேவைகளைத் தெரிவிக்கமுடியாது வருந்தினவாம். அப்பொழுது முன்பு குறித்த பெண் நோயாளி அவவுக்கு ஒருவாறு உதவியாக இருந்தாவாம். முந்திய நோயாளி வைத்தியசாலையை விட்டு வீட்டுக்கு வந்தபொழுது பிந்திய பெண் நோயாளி பெரும் மனவருத்தத்துடன் இருந்தாவாம். எவ்வளவு மன வருத்தத்தினை இத்தகைய நிலைமை உண்டாக்குகின்றதென்பதை எம்மவர் பலர் அறியார்கள் போலும்?

மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சி கொழும்பில் நிகழ்ந்ததென்று ஒருவாறு சமாதானம் கூறக்கூடும்தான் - ஆனல், சில நோய்களுக்கு இங்கிருந்து கொழும்புக்குப் போகவேண்டிய தேவை ஏற்படுகின்றது அப்பொழுது சிங்களம் அறியாதவர்களின் நிலையைச் சொல்லவும் வேண்டுமா? தாதிமார்களாய், மருத்துவப் பெண்களாய், நோயாளர் துணைவாய்ப் பயிலுதற்கு எம்மவர் முன்வராவிட்டால் எங்கள் வைத்தியசாலைகளிலேயே கொழுமபு நிலைமை உண்டாதல் கூடுமன்றோ? தனிச் சிங்களச் சட்டத்தின்படி சிங்கள மொழியில் மாத்திரம் தகுதி பெற்றோர் குறித்த சேவைகளில் இடம்பெற்றுத் தமிழ்ப் பகுதிகளுக்கு மாற்றப்பட்டால் அவர்கள் தான் என்ன செய்வார்க ? நிலைமையைத் திருத்த முடியாது யாவரும் துன்புறவேண்டி நேர்ந்தாலும் நேரலாம. அப்படியான நிலைமை ஏற்படவிடாது, தடுக்கவேண்டுமானல், எம்மவர் அச்சேவைகளில் இடம்பெறுதல் வேண்டும். எங்கள் பொருளாதார நிலைமையைத் திருத்துமபொருட்டும் நோய்வாய்ப்பட்டு வருந்தும் காலத்தில வேண்டிய உதவியை எம்மவர்க்குச் செய்யுமபொருட்டும் குறித்த சேவைகளில் எங்கள் இளம்பிள்ளைகள் ஆடவர் பெண்கள் இருபாலாரும் சேர்தற்கு முன் வருதல் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. சம உரிமை பெண்களுக்கு வேண்டும் என்று ஆவேசத்தோடு பேசியும் எழுதியும் வரும் நாரியர் இத்தகு தொண்டுகளில இறங்கிச் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் சேவை செய்யக்கூடாதா? சேவையுள்ளம வரவரக் குன்றுகின்றதா? "தாய்க் குலமே! சேவை அழைக்கிறது — சற்றுத் திரும்பிப் பாருங்கள்!! வாழ்க சேவை உள்ளம்; வளர்க சமூக சேவை".

கா இரகுநாதன்
நாயன்மார்கட்டு,
15-3-58.

### தமிழரசுக் கட்சித் தலைவர்

திருக்கோணமலைப் பிரதிநிதி திரு. என் ஆர். இராசவரோதயம் தமிழரசுக் கட்சித் தலைவராய் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.

## அடைவு நகை விற்பனவு விளம்[illegible]

அரசாங்க உத்தரவுடன் கரம்பன் ஊர்காவற்றுறையில் அடைவு பி[illegible] வீ. தம்பிப்பிள்ளை அவர்களின் அடைவு கடையில் அடைவு வைக்கப்பட்டுத் தவ[illegible] தப்பி மீட்கப்படாதிருக்கும் பின்வரும் காணும் நகைகள் என்னல் 1958 - ம் [illegible] சித்திரை மீ 10-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் ஒன்பதுமணி தொடக்கம் ஷெ அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### நகை விபரம்

| | இல | பெயர் | விலாசம் | நகை விபரம் | திகதி |
|---|---|---|---|---|---|
| (1) | 4704 | அ. திரேசம்மா | கரம்பன் உப்புக்குளம் | ஒரு புரூச்சு | 10-3-56 |
| (2) | 4825 | க. நாகமணி | சரவணை மேற்கு | ஒரு ஓட்டல் கொடியும் தாலியும் | 16-3-56 |
| (3 | 5039 | வை. பாலசிங்கம் | சரவணை மேற்கு | ஒரு மோதிரம் | 27-3-56 |
| (4) | 5214 | ம. சீனிமுத்து | Kayts மேற்கு | ஒரு மோதிரம் | 6-4-56 |
| (5) | 5566 | ச. விசுவலிங்கம் | புளியங்கூடல் | இரண்டுகூடும் ஒருசோடி பொன்கடுக்கனும் | 23-4-56 |
| (6) | 6284 | இ. மார்க்கண்டு | சரவணை மேற்கு | ஒரு கூடு | 30-5-56 |
| (7) | 6631 | ச. விசுவலிங்கம் | புளியங்கூடல் | ஒரு மோதிரம் | 18-6-56 |
| (8) | 6632 | ச. விசுவலிக்கம் | புளியங்கூடல் | ஒரு சோடி காப்பு | 18-6-56 |
| (9) | 6718 | க. சிவநேசம் | தோப்புகாடு காரைநகர் | ஒரு சோடி தூக்கணம் | 22-6-56 |
| (10) | 6795 | அ திரேசா | கரம்பன் களிக்கரை | ஒரு வளையல் | 26-6-56 |
| (11) | 6849 | மு பெரியதம்பி | அனலைதீவுதெற்கு | ஒற்றைத்தோடும்ஒருசோடிதூக்கணமும் | 28-6-56 |
| (12) | 7002 | க. செல்லத்துரை | சரவணை மேற்கு | ஒரு சோடி சிமிக்கி | 6-7-56 |
| (13) | 70 1 | அ நாகமுத்து | கரம்பன் களிக்கரை | ஒரு மோதிரம் | 9-7-56 |
| (14) | 7070 | தா கதிரேசு | நெடுந்தீவு | ஒரு தாலிக்கொடி | 10-7-56 |
| (15) | 7233 | சி பொன்னம்பலம் | எழுவைதீவு | ஒரு மோதிரம் | 18-7-56 |
| (16) | 8116 | க. சிங்காரம் | கரம்பன் களிக்கரை | ஒரு தாலி | 30-8-56 |
| (17) | 8222 | ப பாக்கியநாதர் | கரம்பன் மெலிஞ்சிமுனை | ஒரு சோடி தூக்கணம் | 4-9-56 |
| (18) | 8561 | வ முத்துக்குமாரு | வேலணைகிழக்கு | ஒரு மோதிரமும் ஒருசோடி தோடும் | 21-9-56 |
| (19) | 8817 | த செல்லத்துரை | Kayts Post Office | ஒரு புரூச்சு | 4-10-56 |
| (20) | 8865 | ம சின்னத்தம்பி | தோப்புக்காடு காரைநகர் | ஒரு கூடு | 8-10-56 |
| (21) | 8933 | செல்லப்பா சுப்பிரமணியம் | சரவணை வடக்கு | ஒரு ஓட்டல் தாலிக்கொடி தடைகளுடன் | 10-10-56 |
| (22) | 8978 | செல்லையா முருகேசு | வேலணை கிழக்கு | ஒரு தாலி | 13-10-56 |
| (2[illegible] | 9140 | வேலுப்பிள்ளை செல்லத்துரை | புளியங்கூடல் | ஒற்றைவளையல் | 23-10-56 |
| (24) | 9391 | B A. முத்தையா | கரம்பன்கிழக்கு | ஒருசங்கிலி ஒருமோதிரம் ஒருபெண்டன் | 7-11-56 |
| (25) | 9405 | வை தியாகராசா | கரம்பன் கிழக்கு | ஒரு மோதிரம் | 7-11-56 |
| (2[illegible]) | 9633 | S. K. பாலசந்திரன் | பருத்தியடைப்பு | மூன்றுகல்லுத் தூக்கணம் | 17-11-56 |

காரைநகர்,
12-3-1958.

[M 250 14-3-58]

வை. ஏரம்பமூர்த்தி,
Auctioneer

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராகா[illegible]நுஷ[illegible] கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 23—3—58—29—3—58. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

தேகசுகம் இந்தவாரம் பழுதாயிருக்கும். சிறிது காலத்துக்கு விசேட கருமங்களை நீர் பின்போட வேண்டிவரும். பணத்துறையில் ஒருநல்லவாரம். குடும்பக் கருமங்கள் சிறிது குழப்பமாயிருக்ககூடும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

வழக்குகளும் குடும்பக் குழப்பங்களுக்கும் இந்தவாரம் உண்டாககூடும் அதிக கண்டனங்களை நீர் முன்னிடவேண்டி வரும். கந்தோரில் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு. வார இறுதியில் நண்பர் அதிக உதவியாயிருப்பர்,

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 1ம் பாதம்.**

பணத்துறைக்கு நல்ல வாரம். தகுதி வாய்ந்தது எதுவோ ஒன்றை நீர் நிறைவேற்றக கூடியதாயிருக்கும் உத்தியோக சித்தியும எதிரிகள அழிவும் நிச்சயம் குடும்பக் கருமங்கள தொடர்ந்து குழப்பமாயிருக்கும்.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,**

உத்தியோக கருமங்களுக்கு நல்ல வாரம். நண்பர் அதிக உதவியாயிருப்பர். எதிரிகளுககு அழிவும் [illegible]களில் வெற்றியும் நிச்சயம் ஆனல் குடும்பசு சூழ்[illegible] எல்லாம் நல்லாயில்லை. பிழை எண்ணங்களுககிடமுண்டு.

**சிங்காரசி மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்.**

ஒரு தளப்பமான வாரம். உம்முடைய முயற்சிகள் எல்லாவற்றிலும் நீர் கவனமாயிருக்க வேண்டும். உம்முடைய நண்பரே உமக்கு நம்பிககைத் துரோகஞ் செய்யககூடும் தேகசுகமும் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. குடும்பக் குழப்பங்களுக்கும் இடமுண்டு.

**கன்னிராசி உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

ஞாயிறும் திங்களும் கவனமாய்க கழிக்கவேண்டும் இனைதவர்கள் மூலம் தொந்தரவுகளுக்கிடமுண்டு. வாரமிகுதி நல்லாயிருக்கும். தனலாபங்களும் உத்தியோக சித்தியும் நிச்சயம்.

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

முதல் இரு நாட்களும் புதுக் கருமங்களுக்கு நல்லாயிருக்கும். செவ்வாய் புதனும் வியாழன் காலையும் கவனமாய்க் கழிக்க வேண்டும், வார மிகுதி திரும்பவும் நன்ருகும்,

**விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.**

முன் அரைவாரம் ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும், ஆரம்ப இடைஞ்சல்களின் பின் உம்முடைய முயற்சியில் நீர் சித்தியடையக்கூடியதாயிருக்கும். காணிகள் காணிப்பொருள்கள் மூலம் இலாபங்களும் நிச்சயம் வியாழன் பிற்பகல் வெள்ளி சனி கவனமாய்க கழிக்கவும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

இந்தவாரம் சிறிது கண்டனத்தை நீர் முன்னிடவேண்டி வரும். தேகசுகமும் பழுதாயிருககும். ஆனல் உத்தியோகத துறையில் நல்லவாரம். நீர் சித்திபெறக் கூடியதாயிருககும். வார இறுதியில் இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு.

**மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,**

ஒரு தளப்பமான வாரம். உம்முடைய சொந்தக் கருமங்களிலும் உத்தியோக கருமங்களிலும் பல முரண்பாடுகளுண்டாகும். பணத்துறையில் ஒரு அளவுககு நல்லவாரம். ஆனல் வேலைவழக்கத்திலும் பார்ககக் கூடுதலாயிருக்கும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

சமுக கருமங்களுக்கும் உத்தியோக கருமங்களுக்கும் நல்ல வாரம். ஆனல் சிறிது காலத்துக்கு ஆறுதலோ மனச்சமாதானமோ உமக்கிருக்கமாட்டாது, பணத்துறையில் நல்ல வாரம்,

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

முரண்பாடுகளுள்ள ஒருவாரம், தேகசுகமும் அதிகம் நல்லாயிருககமாட்டாது. வரவு செலவைச் சமாளிப்பதில் நீர் வருந்தப்படுவீர். மேலதிகாரிகளுடன் சண்டைகளைத் தவிர்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [...]தியர் சேவைபற்றிச் [...]ங்கங்கள் கவனிக்குமா?

—:0:—


மட்டக்கிளப்பு, அநுராதபுரம் பதுளை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் மருத்துவத் தாதிமார் பயிற்சிக் கல்லூரிகள் நிறுவுவதற்காகிய திட்டங்களைச் சுகாதாரப் பகுதி இப்பொழுது தயாரித்துள்ளதாம். இத் திட்டங்கள் இப்பொழுது சுகாதார அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த வருட ஆரம்பத்தில் மருத்துவத் தாதிமார் பயிற்சிக் கல்லூரிகள் உருவாகி விடும் என்று சுகாதார அமைச்சு எதிர்பார்க்கின்றதாம். இந்த மருத்துவத் தாதிமார் பயிற்சிக் கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் சுமார் 200 மாணவிகள்வரை அநுமதிக்கப்படுவார்களாம். முதல் வருடம் 75 மாணவிகளும், அடுத்த வருடம் 75 மாணவிகளும் அநுமதிக்கப்படுவராம். பயிற்சி மூன்று வருடங்களைக் கொண்டதாம். மூன்ருவது வருடப் பயிற்சி வைத்தியசாலைகளில் அளிக்கப்படுமாம். இவ்விதமாகப் பயிற்சி அளித்து நாட்டின் தேவையைப் பூர்த்தியாக்க அமைச்சரவை முன்னிற்கும்வேளையிலே யாழ்ப்பாணத்திலுள்ள மருத்துவத் தாதிமார் பயிற்சிக் கல்லூரியில் சுமார் 40 மாணவிகள் மாத்திரம் உள்ளனராம். அதிலும் இவர்களுள் 32 மாணவிகள் சிங்கள மாணவிகள் என்பது குறிப்பிடக் கூடியதாக இருக்கிறது. இந்நிலையில் ஈழத்தின் சுகாதார அமைச்சு மருத்துவத் தாதிமார் பயிற்சிக்குத் தமிழ் மாணவிகளிடமிருந்து அதிக ஊக்கம் காணப்படவில்லையென்று கவலைப்படுகின்றதாம்.

தாதிச் சேவைப் பயிற்சிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிக்கே தமிழ் மாணவிகள் தொகையிலும் பார்க்க பன்மடங்கு அதிகமாகச் சிங்கள மாணவிகள் போட்டியிட்டுக்கொண்டு கொண்டு முன் வந்திருப்பது போற்றற்குரியது. ஆனுல், தமிழ்ப் பெணகள் - தமிழ்ப் பிள்ளைகள் இச் சேவைக்குப் பின் நிற்பது எதற்காக என்று தெரியவில்லை, சம்பள அடிப்படையில் ஏதாவது சங்கடங்கள் உண்டோவென்று விசாரித்தபொழுது அப்படியல்லவென்றும், தாதிப் பெண்களின் சம்பளம் உயர்தரக் கல்வி பயின்ற ஆசிரியர்களின் சம்பளத்தையே ஒருவாறு ஒத்திருக்குமென்றும் அறிய முடிகிறது. இது இப்படியிருக்க, நம் தமிழகத்துப் பெண் பிள்ளைகள், தாதிச் சேவைக்குப் பின்நிற்பது எதற்காகவென்று கேட்கின்றோம். சம உரிமை வேண்டும் —பெண்களுக்கு, என்று வீராவேசப் பேச்சுக்கள் நிகழ்த்தும் பெண்குலத்தைக் கேட்கின்றோம்.

தாதிச்சேவை தகுதிகுறைந்ததாக உங்கள் உள்ளங்களிற் படுகின்றதா? கையலார் பெருமை குன்றிவிடும் என்று கருதுகிறீர்களா? உங்கள் இனத்திற்கு - உங்கள் நாட்டிற்குச் சேவை செய்ய உங்கள்உள்ளங்கள் மறுக்கின்றனவா? சேவை என்று எதைக் கருதுகின்றீர்கள்? நவநாகரிகத்தில் மூழ்கி - மேனி மினுக்கிலே செல்வத்தைச் சீரழித்துப் பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்து - வையத்திலே வாழத்தெரியாது திராவகத்தையும்,பிறகஞ்சு மருந்துகளையும் தஞ்சமெனக் கொள்ளும் பாவையர்கள் பெருகிவரும் இக்காலத்திலே - தமிழ்ப்பெண்கள் தன்மானச்சேவைக்கு - தன்நாட்டுச் சேவைக்கு தன்னலமற்ற பொதுச் சேவைக்கு - தயாராகி விட்டார்கள் என்பதைக் காட்டுவதற்கும், சுகாதாரஅமைச்சின் கவலையைப் போக்குவதற்கும், நம் நாட்டின் தேவையைப் பூர்த்தியாக்குவது நமது கடமை. தன் கையே தனக்குதவி என்ற எண்ணம் எழுந்து - தாதிச் சேவைக் கல்லூரியில் சேரத் தமிழ்ப் பிள்ளைகள் குறிப்பாக, யாழ்ப்பாணத் தமிழ்ப்பிள்ளைகள் உடனடியாகச் சேரவேண்டும். ஆயிரம் விண்ணப்பப்பத்திரங்கள் எடுத்து அவசர அவசரமாக அனுப்பி நான முந்தி என்று போட்டியிட்டுக் கொண்டு - சேவைக்கு முன்வரவேண்டும். தமிழகமே இந்நிலைமையைக் கண்டு திகைக்கவேண்டும்.

மாதர்சங்கங்கள், மங்கையர் கழகங்கள் பெருக்கும் புகழுக்கும் இருந்தாற் போதாது. உடனடியாகச் செயலில் இறங்கி, வீடுவீடாகச் சென்றுபிள்ளைகளுககு விஷயத்தை விளககி இனறே நல்லன செய்யவேண்டும். எதற்காக மாதர்கள் பின் நிற்கவேண்டும் தொண்டு செய்ய முன்வருவார்களா?

**கா. இராசம்மா**
வட்டு - மேற்கு
வட்டுக்கோட்டை.




# திருக்கேதீச்சரப் பெருமான் திருவருட் சிறப்பு

## உற்சவங்களிற் பங்குபற்றி அன்பர்கள் இன்புறுக

—0—0—

**(உற்சவ ஆரம்பம் 20-4-58)**

சர்வலோக நாயகராகிய சிவபெருமான் எல்லாப் பொருள்களிலும் அணுவுக்கு அணுவாய் அப்பாலுககப்பாலாய் அகமும் புறமும்கலந்திருக்கிறார். அதனை மணிவாசகப் பெருந்தகையாரும் "புறம்புறம் திரிந்த செலவமே" எனக் கூறியுள்ளார். இத்தகைய பரம்பொருளின் நுட்பத்தைப் புராண இதிகாசங்களும் எடுத்துக் கூறுகின்றன. திருஞானசம்பந்த சுவாமிகளும,

"விருது குன்றமாமேருவி
னாணரவாவனலெரி
யம்பாற்
பொருது மூவெயில் செற்ற
வன் பற்றிநின்றுறை
பதியெந்நாளும்"
"கருதுகின்ற வூர்கனை கடற்
கடிகமழ் பொழிலணி
மாதோட்டம்
கருதநின்ற கேதீச்சரங்கை
தொழக் கடுவினையடை
யாவே"

என அருளினர். எனவே சிவபெருமான் வீற்றிருந்தருளுமிடம் எதுவோவெனில் கடல் சூழ்ந்த வாசனை கமழும் சோலைகள் செறிந்த மாதோட்ட நகரிலுள்ள கேதீச்சரமென்னும் தலமாம். இறைவன் தத்துவாதீதன். எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவன். மண்ணகத்தே வந்துதான் மக்களை உய்தியடையச் செய்கின்றார். இதனை மணிவாசக அடிகள் "நிலந் தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி" எனவும் சேக்கிழார் பெருமான் "மண்ணில் வளர்மதிக்கொழுந்தை" எனவும் கூறியுள்ளார்கள் ஆகவே ஈழநாட்டின் மண்ணகத்தே கோயில் கொண்ட கேதீச்சர தலத்தை வணங்கினோர்க்கு தீவினைகள் வந்து சேரா. அண்மையில நடந்த வெள்ளப் புரட்சியிலும் மககள பெருந் துன்பம் அடைய அவர்களைத் தோணிபுரநாதராக நின்று காப்பாற்றியதும் கேதீச்சரநாதரின் திருவருளேயாகும். இத்தகைய திருவருள் செறிந்த தலத்தில் நாம் வணங்கியெழ, வருத்தத்தைச் செய்யும் தீவினைகள் எல்லாம் கெடும். இன்னும் இத்தலத்

........................................
— செ. கோ. —
........................................

கையடைபவர்களையும் தீவினையடையாது. தொண்டர் மேல் வருந்துன்பங்கள் கெடும். இத்தகைய கேதீச்சரத்தில் இரவும் பகலும் துதித்து அவரது இருபாதங்களையும வணங்கும் அன்பர்களே சிவனடியார்கள் என்று சொல்லப்படுவர்கள்.

திருக்கேதீச்சரப் பெருமான் மாதோட்டத்திலேயே சுயம்புவடிவாய் இருக்கிறார் அருள் வள்ளலார் சம்பந்தசுவாமிகள "கேதீச்சரம் பிரியாரே" எனத் திருவாய் மலர்ந்தருளியதும ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்களும் மாமருந்தைத் திரவியத் தைத் தேன் பொந்தை என்று கூறியதும் அவர்கள் கேதீச்சர நாதரின் அருட் காட்சியிற் கண்டெழுந்த ஆப்த வாக்கியங்களாகும். இன்[...]ம் பண்டைஞான்று இ[...]தலத்திலிருந்து வாழ்[...] தொண்டர்கள் எல்லோரும தோத்திரப் பாமாலைச[...]ப் பாடிக் கேதீச்சர நாத[...]ன் திருவருள் பெற்று உ[...]ந்தியடைந்தார்கள். இன்று தோத்திரங்களைப் பாடுகிறதற்குப் பலர் கூசுகிறார்கள். ஏன் விஞ்ஞானக் கருவி மூலம் ஒலிபரப்பும் இக்காலப் பாடல்களை நாம் கேட்கும் போது நாம் ஏன் வாய் திறந்து பாடுவான் இறைவனு கேட்பது என்ற எண்ணம்போலும்! நாம் பொறுத்திருந்து ஆண்டவனைத் தொழ வேண்டும். ஆண்டவனைத் தொழுவதென்றல் புராதனனும் கேதீச்சரநாதரை வழிபட வேண்டும். ஞானசம்பந்தர் பாடிய தேவாரத்தைப் பாடவேண்டும். அன்பர்களே முத்தியின்பத்தை அடைவார்கள்.

அலங்காரத் திருவிழாக்கள் திருக்கேதீச்சரத்தில் (20-4-58 ல்) நடைபெறவிருக்கின்றன. அவற்றிற் பல சைவக்கல்லூரிகள் பங்குபற்றுகின்றன. சைவ அன்பர்களும் அடியார்களும் பங்குபற்றித் திருவருள் பெறுக. கேதீச்சர நாதர்திருவடிகளே சரணம்.

# சர்வகலாசாலை விசாரணைச்சபை விடுத்திருக்கும் சில வினக்கள்

—:0:—

1. எதிர் பார்த்திருந்தபடி எவ்வளவுக்கு இலங்கைச் சர்வகலாசாலை நன்மை பயப்பதாயியங்கியிருக்கின்றது அல்லது எவ்வளவுக்குக் குறைவு பட்டிருக்கின்றது. குறைவுபட்டிருந்தால் நாட்டின் சமய மொழி, கலாசார அடிப்படையில் சமூகம் பொருளாதாரம் அரசியல் ஆகிய துறைகளில் என்னென்ன திருத்தங்கள் செய்யவேண்டும?

2. கல்வி, உத்தியோகம், தொழில் நுட்பம ஆகிய துறைகளில் இப்பொழுதுள்ள ஒழுங்கு நாட்டின் தேவைக் கேற்றதா?

3. இரண்டாவது வைத்தியக் கல்லூரிக்கும், எந்திரக் கல்லூரி ஒன்றுக்கும் தேவையிருக்கின்றதா?

4. இந்நாட்டினதும் ஆசியாவினதும் பண்பாட்டுக் கேற்றவாறு சமய தத்துவ, இலக்கிய இதிகாச சிற்பக் கல்வி முறைகள் அமைந்திருக்கின்றனவா?

5. நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்தற்கு வேண்டிய புதுக் கல்வித் துறை எதுவாயினும் அமைக்கப்படவேண்டுமா?

6. வெளிமாணவருக்குப் பட்டமளிக்கும் ஒழுங்கு செய்யப்படவேண்டுமா?

7. இந்நாட்டிலுள்ள பாடசாலைகளிற் பயிற்றப்படும் கலவி முறையுடன் சர்வகலாசாலைக் கல்வி முறை பொருத்தமானதாய் இணைந்திருக்கின்றதா? பொருத்தமாக இணைதற்கு வேறு சிறந்த வழிவகை என்ன?

8 நாட்டிலுள்ள பாடசாலைகளின் கல்வி மொழிக்கேற்றவாறு சர்வகலாசாலைக் கல்வி மொழியில் என்ன மாற்றம் செய்யவேண்டுமென்று கருதலாம்? மாற்றம் செய்யவேண்டுமேயானல் எவ்வளவுக்குச் செய்யவேண்டும்? எவ்வளவு விரைவிற்செய்ய வேண்டும்.

9. நாட்டிலுள்ள ஆராய்ச்சி நிலையங்களை ஒழுங்குபடுத்துதற்கு ஓர் தேசீய ஆராய்ச்சிச் சபை தேவையா?

10. சர்வகலாசாலைக் கல்வி வசதிகூட்டப்படவேண்டுமா? அப்படியானல் வெளி மாணவர் பயிற்சி ஒழுங்குகள் செய்யப்படவேண்டுமா?

—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டி சன்மார்க்க சபை

—:o:—

## ஈழகேசரி பொன்னையா வீதித் தொடர்பிற் பாராட்டுரைகள்

ஈழகே[illegible] பொன்னையா வீதியை [illegible]ரசாங்க பகிரங்க வேலைப்[illegible]தி பொறுப்பேற்றுள்ள [illegible]சய்தியைப் பொது மக்களுக்கு அறிவிக்கும் முகமாக விசேட கூட்டம் 9-3-58 ஞாயிற்றுக் கிழமை மாலை 6-30 மணிக்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெற்றது. சபைத் தலைவர் ஆசிரியர் கோ. நமசிவாயம் அவர்கள் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி முன்னுரை கூறினர். அதன்பின் சபை உபதலைவர் ஆசிரியர் நா. சிவசாமி அவர்கள் 13-12-47 தொடக்கம், 20-2-58 வரையும் இவ்வீதி சம்பந்தமாகச் சபை எடுத்த நடவடிக்கைகளை வரிசைக்கிரமமாக விளக்குகையில், காணிகளை விட்டுக்கொடுத்த பொது மக்கள் இவ்வளவு காலமாகப் பொறுமையோடு ஒத்துழைத்ததைப் பாராட்டினர். 2மைல் நீளமான வேலிகளை வெட்டியவுடனேயே தூர இடங்களிலிருந்து மரங்களைக் கொண்டுவந்து புதிதாக வேலிகளைப் போட்டுக்கொடுத்து, சிரமமான காரியத்தைப் புன் சிரிப்புடன் செய்த தீர வாலிபர்களையும் பின்னணியில் நின்றோரையும் போற்றினர். எந்த அமைச்சர்மார், உதவி அமைச்சர்மார், காரியாலயத் தலைவர்கள் யாழ்ப்பாணம் வருகை புரியும் போதும், எமது சபையைப் பார்வையிட்டபோதும் மற்றெல்லா விடயங்களையும் விட இந்த வீதியே முக்கியமென்று எடுத்துக்காட்டியும், வாதிட்டும் முயற்சித்த அவ்வக்கால இச்சபைத் தலைவர்களையும் காரிய உறுப்பினர்களையும் வாழ்த்தினர் அப்போதிருந்த மயிலிட்டிக் கிராமச்சங்கத் தலைவரது புத்திமதியும், வலிவடக்குக் காரியாதிகாரியின் ஆலோசனைகளும் வடமாகாண அதிபரின் ஒத்துழைப்பும் இக் காரியம் கைகூடுவதற்கு எப்படி உதவின என்பதை எடுத்துக்காட்டினர். கெக்கராவா பட்டின சங்கத்தின் முன்னுள் தலைவரும் மயிலிஷ்டி கிராமச் சங்கத் தற்போதைய தலைவரும் பிறரும், காங்கேசன் துறைத் தொகுதி பழைய புதிய பாராளுமன்ற அங்கத்தவர்களும் செய்த சேவையை நாம் மறக்கவியலாது என்று வற்புறுத்தினர்

பின்னர் ஆசிரியர் திரு.கனக. செந்திநாதன் சன்மார்க்க சபை இக்கிராமத்துக்கு இது நாள்வரை செய்த பல நற்காரியங்களை நினைவூட்டி, பொன்னையா அவர்கள் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு அவர் காலத்தில் அகலிக்கப்பட்ட இவ்வொழுங்கை அவராற் பயிற்றப்பட்ட ஊழியர்களின் ஊக்கத்தால் இன்று நன்முடிவாக முடிந்தமையைக்கண்டு அவரது ஆவி நிச்சயம் மகிழும் என்றும், இன்னும் செய்ய வேண்டிய பணிகள் எவ்வளவோ இருக்கின்றன என்றும் அவர்திற்குக் கிராம மக்களின் ஒத்துழைப்புத் தேவையென்றும் கூறினர்.

அதன்பின் கெக்கராவா பட்டினசங்கத்தின் முன்னுள் தலைவர் க. தம்பிப்பிள்ளை அவர்கள் பேசியபோது சிங்களமக்கள் அதிகமாக இருக்கும் கெக்கராவைப் பட்டின சங்கத்தலைவராக இருந்து அம் மக்களுக்கு அளப்பரிய சேவையைத் தாம் செய்து வந்தபோதிலும், தாம் பிறந்த கிராமத்தை மறக்காமல் இச்சபையின் காரியதரிசி கேட்டுக்கொண்டதின் பேரில் போக்குவரத்து மந்திரியாரைச் சந்தித்து இவ்வீதி சம்பந்தமாக எடுத்துக்கொண்ட முயற்சிகளை விளக்கினர். சபைக் காரியதரிசியின் முயற்சி, அவர் கொடுத்த குறிப்புக்கள், படங்கள் என்பன தமக்கு எவ்வகையில் உதவியாக இருந்தன என்பதைச் சுட்டிக்காட்டினர் முடிவில் உண்மையாக இக்கிராமத்துக்குச் சன்மார்க்க சபை தான் நல்ல தொண்டைச் செய்து வருகிறது என்றும் இன்னும் கிராம மக்கள் நன்மையடைய வேண்டுமானல் அச்சபையைத் தளரவிடாமற் காப்பாற்றும் வாலிபர்களுக்குப் பக்கபலமாக நின்று உதவி செய்வது ஒவ்வொருவரினதும் கடன் என்றும் கூறினர்.

பின்பு, மயிலிட்டிக் கிராமச் சங்கத்தின் முன்னை நாள் தலைவர் வ. இராசநாயகம் ஜே. பி. அவர்களதும், கொழும்பு, நீர்கொழும்பு முதலிய பிற இடங்களில் வசிக்கும் குரும்பசிட்டி அன்பர்களதும வாழ்த்துச் செய்திகளை ஆசிரியர் திரு. த. பொன்னுத்துரை அவர்கள் வாசித்தனர். அதன் பின்னர் சபை காரியதரிசி ஆசிரியர். திரு த.இராசரத்தினம் அவர்கள் காங்கேசன்துறைத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம் அவர்கள் இவ் வீதி சம்பந்தமாகச் சபைக்கு அண்மையில் எழுதிய கடிதத்தை வாசித்துக் காட்டி சபை எடுத்த முயற்சியில் பங்கு கொண்டோரனைவருக்கும் இந்த மகிழ்ச்சித் திருநாளிற் சபையின் பணிவான நன்றியைத் தெரிவிப்பது முக்கியமென்று கூறி நன்றிதெரிவிக்கும் பிரேரணையைப் பிரேரித்தார். பிரேரணை பொதுவாக எல்லோருக்கும் நன்றிகூறுவதாக இருந்தபோதிலும் முக்கியமாகத் தற்போதைய போக்குவரத்து அமைச்சர், காங்கேசன் துறைத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர், வடமாகாண அதிபர், உள்ளூராட்சி மன்ற உப ஆணையாளா, வலிவடக்குக் காரியாதிகாக், மயிலிட்டிக் கிராமச்சங்கத்தார் என்போருக்கு விசேட நன்றி கூறுவதாக அமைந்திருந்தது அப் பிரேரணையை [illegible] முன்னேற்றச் சங்க[illegible] திரு. க. திருநாவுக்கரசு அவர்கள் [illegible]த்தார். பிரே[illegible] [illegible]வே றியது.

## தேவை

—0—

பத்திரிகை வேலையையும் அச்சுக்கூட வேலையையும் விரும்புகின்ற தகுதியுடைய இளம் வயசினர் அல்லது உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்றிருக்கும் நாற்பது வயசுக்குட்பட்டவர் சைவப் பிரகாச அச்சுயந்திர சாலை நடைமுறை வேலையிற் பயிற்றப்படுதற்குத் தேவை. பயிற்சியின் பின் சம்பளம் நிச்சயிக்கப்படும். தராதரப் பத்திரங்களுடன் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை கௌரவ காரியதரிசிக்கு விண்ணப்பஞ் செய்க.

V. கார்த்திகேசு
கௌரவ காரியதரிசிக்காக
வண்ணர்பண்ணை
28-2-58.

### உரும்பராய் ஸ்ரீ சிதம்பர சுப்பிரமணியசுவாமி கோவில் சம்புரோக்ஷண கும்பாபிஷேகம்

உரும்பராய் பரத்தைப்புலமென்னும் க்ஷேத்திரத்தில், திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிதம்பர சுப்பிரமணியப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும், நிகழும் ஏவிளம்பி ஆூ பங்குனி மீ 13உ (26-3-58) புதன்கிழமை 9-10 — 11-05 மணிக்கிடையில் இடபலக்கினமும், ரோகிணி நக்ஷத்திரமும் கூடிய சுப முகூர்த்தத்தில் சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் நடைபெறும். அச்சுவேலி பிரம்மஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் பிரதிஷ்டாகுருவாக விளங்குவார் கர்மாரம்ப கிராம சாந்தி முதலியவை ஞாயிற்றுக்கிழமை 23-3-58 இரவு 7 மணியளவில் தொடங்கி நடைபெறும்.

### கண்டி சைவமகாசபை

கண்டி சைவமகாசபையின் வருடாந்தக் கூட்டத்தில் புதுவருட உத்தியோகத்தராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பெற்றனர்.

போஷகர்கள்: இராசவாசல் முதலியார் என். கனகநாயகம், முதலியார் கே. வி. அரங்கநாதன், வழக்கறிஞர் திரு. பி. பாலசிங்கம், திரு. ஏ. பி. எஸ் ரி. பொன்னம்பலம் பிள்ளை, திரு. எஸ். கனகசபை, திரு ஏ.கே.வேலுப்பிள்ளை, திரு எஸ். பி. வைத்திலிங்கம், தலைவர் திரு எம் எஸ் துரைசுவாமி ஜே. பி. உபதலைவர்கள் திருவாளர்கள்: பி. அம்பலவாணர், எஸ். தனஞ்செயராசசிங்கம், கே. கணேசரத்தினம் பி. சுப்பிரமணியம் பி. பாராசசிங்கம் இணைக்காரியதரிசிகள் திரு. ஏ. சிதம்பரப்பிள்ளை திரு. ரி. எஸ். சண்முகதாசன், தனதிகாரி திரு. எம். கனகராசா.

படிப்புப்பகுதிக் காரியதரிசி திரு எம். ஆனந்தர், குருபூசை நூல்நிலையக் காரியதரிசி திரு எஸ். சுப்பிரமணியம். வெளியீட்டாசிரியர் திரு. எஸ்.நல்லசிவம். இவர்களுடன் நிருவாக சபை அங்கத்தவராகப் பன்னிருவர் தெரிவுசெய்யப் பெற்றனர். கணக்குப் பரிசோதகர்கள்: திரு பி. சின்னையா, திரு. எஸ். ஏ. விசயநாயகம்.

# திருவள்ளுவர் திருநாள்

—:o:—

### காரைநகர் சைவமகாசபையில்

சென்ற 5-3-58 வியாழக் கிழமை மாலை 5 மணியளவில் திருவள்ளுவர் குருபூசை மேற்படி சபைமண்டபத்தில் கொண்டாடப்பட்டது. முதலில் மேடையில் அலங்கரிக்கப்பட்டிருந்த திருவள்ளுவநாயனரின் திருவுருவப்படத்திற்கு அலங்காரபூசை நடத்தப்பட்டது.

இதன் பின்னர் காரைநகர் இந்துக்கல்லூரியிலிருந்து இளைப்பாறிய ஆசிரியர் திரு. இ. கந்தையா அவர்களின் தலைமையில் வியாவில் வித்தியாசாலை அதிகாரி திரு. இ. நாகலிங்கம் அவர்கள் திருவள்ளுவரின் சரிதையை விரிவாக எடுத்துரைத்தனர். திரு. சுமுத்தையா அவர்கள் (மானிடல்) தமது குறிப்புரையில் நாயனரின் இல்லற வாழ்க்கையின மேன்மையைப்பற்றியும் அவ் வாழ்க்கையின் மணமே இக்காலத்தில் இல்லையென்றும் அவர் கூறிய இல்லறத்தைப்பற்றித் திருப்பித் திருப்பிப் பேசுவதில் ஒருவித சுகமில்லையென்றும் அவ்வறத்தைக் கடைப்பிடித்தொழுகிவர நாம் ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டுமென்றும் அழகாக எடுத்துரைத்தனர்.

தலைவர் தமது முடிபுரையில் ஒழுக்கத்தைப்பற்றி நாயனரின் குறளில் சில பாக்களை எடுத்து விளக்கிக் கூறினர்.

காரியதரிசி திரு. அ. நாகலிங்கம் அவர்கள் தற்கால உலகம் திருவள்ளுவரைப் பற்றிப் புகழாகப் பேசுவதேயன்றி அவரின் போதனைகளில் சிலவற்றையேனும் கைக்கொள்ளுகின்றார்களில்லையென்றும் அவ்வாறிருப்பது உலக மாற்றமென்றும் அவரின் போதனைகளை அனுசரிக்கும் காலம் வராமல் போகாதென்றும் எடுத்துரைத்து அன்று சமுகமளித்தவர்களுக்கு நன்றிகூறினர். ஈற்றில் தேவார பாராயணத்துடன் கூட்டம் 7 மணியளவில் பூர்த்தியாயிற்று.

## அணிந்துரை அரங்கம்

### வாழ்க்கையில் வெற்றி

இது இமயமலை இருஷிகேசம் ஸ்ரீ சுவாமி சிவானந்தா அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்று ஸ்ரீ கி. வானமாமலை அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பெற்று, யாழ்ப்பாணம் — கொழும்பு விவேகானந்த அச்சகம்—புத்தகசாலை முதலியவற்றின் அதிபரும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேர்த் திருப்பணிச் சபைக் கௌரவ காரியதரிசியுமாயிருந்து 27-3-57 ல் இறைவன் திருவருள் வழி இவ்வுலக வாழ்வை நீத்த திரு. வே சுந்தரம்பிள்ளை அவர்களின் நினைவு மலராய் (சுந்தர மலர் 2 இலவச வெளியீடாய் அன்னரின் சகோதரர்களால் வெளியிடப்பெறுவது.

இக்கால இளைஞரின் நலனே நோக்கமாயுள்ள பன்னிரண்டு கட்டுரைகள் மிளிர்கின்ற இவ்வெளியீடு நயினை வீரகத்தி விநாயகரின் திருவுருவம் பிரதிட்டை செய்யப்பெறும் நன்னாளில் வெளியிடப்பெறுகின்றது. இவ்வாறு பொதுநலக்கருத்துடன் அருள் பொலியும் நன்னாளில் வெளியிடப்பெறுவது இதற்கோர் தனிச் சிறப்பாகும்.

### நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகராலயம்

ஏவிளம்பி ஆூ பங்குனிமீ 13ந் திகதி (26-3-58) புதன்கிழமை பகல் 10-14 மணி முதல் 11-09 மணி வரையில் வரும் இடபலக்கினத்தில் பின் நவாம்ச பாகத்திலுள்ள சுபமுகூர்த்தத்தில், கொழும்பு - யாழ்ப்பாணம் விவேகானந்த அச்சகம் - புத்தகசாலை முதலியவைகளின் அதிபராகவும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேர்த்திருப்பணிச் சபையின் முன்னுட் காரியதரிசியாகவுமிருந்த திரு. வே. சுந்தரம்பிள்ளை அவர்களால் செய்விக்கப்பெற்ற எழுந்தருளி விநாயகர் விக்கிரகத்திற்குக் கும்பாபிஷேகம் செய்யத் திருவருட்டுணைகொண்டு நிச்சயிக்கப்படுவதால் அடியார்கள் யாவரும் வந்து புதிதாகச் செய்யப்பெற்ற அழகிய எலிவாகனத்தின்மீதுஎழுந்தருளி வீதி வலம் வரும் புதிய விநாயகப்பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும்வண்ணம் வேண்டப்படுகின்றனர் என்று விவேகானந்த அச்சக புத்தகசாலை உரிமையாளர்கள் அறிவிக்கின்ருர்கள்.

மேற்குறித்துள்ள விழாவிற் கலந்து கொள்ளும் அன்பர்களின் வசதிக்காக விண்ணப்பிக்கும் அன்பர்கள் 25-3-58 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 5 மணிக்கு காரைநகர்த் துறைமுகத்திலிருந்து நயினாதீவுக்குச் செல்லவும், அவ்விடமிருந்து 26 3-58 புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்குத் திரும்புவதற்குமாக இலவச மோட்டார் வள்ள ஒழுங்குகள் செய்யப்படுகின்றனவென்று அறியப்படுகிறது.

### கதிர்காமத்தில் முதியோர் வகுப்பு

கதிர்காமத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் என தமிழ் மக்களுக்காகச் சேவை செய்துவரும் 'கதிர்காமசேவாசங்க' ஆதரவில் முதியோர் வகுப்பொன்று 5-3-58 புதன்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகிறது. சமய சம்பந்தமான அறிவைப்பெற இவ் வகுப்புப் பெரிதும் உதவி செய்வதால் பல ஆண்களும் பெண்களும் விரும்பிப் பங்குபற்றி வருகிருர்கள். அவர்களின் தொகை 80ஐ அடுத்துள்ளது. இவ் வகுப்பு திங்கள், புதன், சனிக்கிழமைகளில் மாலை 7 மணி தொடக்கம் 8-30 மணிவரை நடைபெறுகிறது. இவ்வகுப்பை, கதிர்காம அரசினர் பாடசாலை ஆசிரியர் திரு. வீர. கணபதிப்பிள்ளை நடாத்தி வருகிருர்.

—கடித.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாநகரசபை

**பஸ் நிலையத்தை உள்ளடக்கிய காலையின் வாடகைப்பணம் அறவிடும் உரிமைக் குத்தகைக்கான கேள்விப்பத்திரம் 1958**

கீழ்வரும் பஸ் நிலயத்தை உள்ளடக்கிய காலையின் வாடகைப் பணம் அறவிடும் உரிமைக் குத்தகைக்கான கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபை கொமிஷனரால் 31-3-58-ம் திகதி பிற் பகல் 4-30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக் கூடிய மாதிரிப் பத்திரத்தில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரை இடப்பட்டனவாகவும் இருக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 31-3-58 ஆம் திகதி பிற்பகல் 3 மணி வரை வழங்கப்படும்'

| சந்தைகள் முதலியவற்றின் பெயர் | கேள்விப் பத்திரங்களின் விலை | கேள்விப்பத்திரங்களை பெறுவதற்காக செலுத்தப்பட வேண்டிய பொறுப்புப் பணம் | கேள்விப் பத்திரங்களைப்பெறுவதற்கு முன் நொத்தாரிசு உறுதிக்காகச் செலுத்த வேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| 1 பஸ் நிலயத்தை உள்ளடக்கியகாலை 1-4-58ம் திகதிமுதல் 30-6-58 ஆம் திகதி வரை | 10-00 | 250-00 | 150-00 |

இதர விபரங்களை கீழே கையொப்பம் இட்டிருப்பவருக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்து அறியலாம்.

கட்சன் செல்வராசா
பதில் மாநகரசபை கொமிஷனர்,
யாழ்ப்பாணம்

மாநகரசபை அலுவலகம்.
யாழ்ப்பாணம்.
17—3—58.

G. 20 21-3-58

உ

# தேவாரத் தேர்தல்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யாதரவில் வருகிற ஏப்பிறில் மாதம் 5-ந் தேதிவரையில் ஒரு தேவாரத் தேர்தல் நடத்தப்படும். அத்தேர்தலில் சித்தியடையும் பிள்ளைகளுக்கு ஆண்களுக்கு வேருகவும் பெண்பிள்ளைகளுக்கு வேருகவும் மேற்பிரிவு, மத்திய பிரிவு, ஆரம்பபிரிவு என்ற பாகுபாடுகளின்படி மூன்று பரிசில்கள் மேற்படி சபை ஆதரவில் ஏப்பிறில் 19-ந் திகதி வரையில் நடத்தப்படும் அகில இலங்கைச் சைவமகாநாட்டில் வழங்கப்படும். அததேர்தலிற் சேர விரும்பும் பிள்ளைகள் தங்கள் முழுப்பெயரையும் வயதையும் வித்தியாசாலைப் பெயரையுங்குறித்து தலைமையாசிரியருடைய கைச்சாத்துடன் தங்கள் நுழைவுப் பத்திரங்களை 21-3-58 க்கு முன் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பி வைப்பார்களாக.

சமயப் பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்

### பாடத் திட்டம்

மேற்பிரிவு
(17 வயதுடையவர்களும்
அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களும்)

| | | |
|---|---|---|
| திருக்கோணமலை | சம்பந்தர் | நிரைகழலரவம் |
| திருஆமாத்தூர் | சுந்தரர் | குன்றவார்சிலை |
| திருத்தாண்டகம்பொது | அப்பர் | சங்கநிதிபதுமநிதி |
| திருக்கயிலாயம் | அப்பர் | வேற்ருக்விண்ணுகி |
| திருவாசகம் | மாணிக்கவாசர் | குறைவிலாநிறைவே |
| ,, | ,, | பாரோடுவிண்ணுய் |
| திருவிசைப்பா | | கற்றவர் விழுங்கும் |
| திருப்பல்லாண்டு | | சீருந்திருவும்பொலிய |
| புராணம் | சேக்கிழார் | தெண்ணிலாமலர்ந்த |
| ,, | ,, | சடைமருங்கிலிளம் [பிறையும் |
| திருப்புகழ் | அருணகிரிநாதர் | நாதவிந்து |

மத்திய பிரிவு
(13 வயது தொடக்கம் 16 வயதுடையவர்கள்)

| | | |
|---|---|---|
| ஊர்த்தொகை | சுந்தரர் | காட்டூர்க்கடலே |
| திருக்கோலக்கா | சம்பந்தர் | மடையில்வாளை |
| திருவாவடுதுறை திருத்தாண்டகம் | அப்பர் | திருவேயென்செல்வமே |
| திருவாசகம் | மாணிக்கவாசகர் | நாடகத்தால் |
| ,, | ,, | காலமுண்டாகவே |
| புராணம் | சேக்கிழார் | ஆதியாய் நடுவுமாகி |
| திருப்புகழ் | அருணகிரிநாதர் | நாரியாகள் ஆசை |

ஆரம்பபிரிவு
(12-ம் அதற்குட்பட்ட வயதுடையவர்கள்)

| | |
|---|---|
| சம்பந்தர் | மந்திரமாவது |
| சுந்தரர் | நத்தார் படை |
| மாணிக்கவாசகர் | பூசுவதும் வெண்ணீறு |
| ,, | முத்திநெறி |
| சேக்கிழார் | கற்பனை கடந்தசோதி |
| ,, | வானுலகும் மண்ணுலகும் |

சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம்
21—2—58

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்

# திரைப்படத்தால் உண்டாகும் தீமை

## பகலிற் பார்ப்பதால் பெருகுகின்றது துன்பம்

திரைப்படம் நல்லதா கெட்டதா? என்பதல்ல இப்பொழுது இங்குள்ள சிக்கல். திரைப் படத்தினுல் விளைவது நல்லதா? கெட்டதா என்பதுதான். இன்றுள்ள நிலையிலே திரைப் படங்களைப்பற்றிநாமாராய்வோமானுல்தமிழ்நாட்டைப் பொறுத்தவரைதீமைதான் விளைகிறது. மேல்நாட்டு நாகரிகஙகள் தமிழ்ப் படங்கள் மூலம் அளவுக்கு அதிகமாகப் பரவிவிட்டன. இதனுலே தமிழ்ப் பண்பு பாழ்படுவதுடன், மக்களின மனநிலையும் மாறிவருகின்றது. இளைஞர்களும், இளம் பெண்களும் மிகக் கெட்ட நடவடிக்கைகளைக் கற்றுக் கொள்கிருர். காதலுக்கும் காமத்துக்கும் அவர்களுக்கு வேறுபாடு தெரிவதில்லை. தமிழ் மக்களால் போற்றப் படும்காதல்எனுந்துறைஇப்பொழுது தூற்றப்பட்டு வருகிறது. திரைப்படத்திலே காதலைக் கண்டு இரசித்த இளைஞர்களும், இளம் பெண்களும் தாங்களும் காதல்எனுந் துறைகளிலே ஈடுபடுகிருர்கள். பெண்களும்தாங்கள் திரைப் படத்தில் கண்டபடி வசீகரமாக ஆடை உடுக்கிருர்கள். அதுமட்டுமல்லாமல் தங்கள் காதல் கைகூடாவிட்டால் இறப்பதற்கும் ஆயத்தமாகிருர்கள். இதை அவர்களுக்குக் கற்பிப்பதும் தற்போதைய திரைப்படங்கள் தான்.

பயந்து பயந்து திருடிய திருடர்கள் இப்பொழுது நவநாகரிக முறையில் திருடக் கற்றுக் கொண்டிருக்கிருர்கள்.

நல்ல படங்களை வெளியிட நாம் எப்பொழுதும் தடையாக இருப்பதில்லை. நல்ல படங்களைஎல்லோரும் பார்த்து, நன்மை பெற வேண்டும் என்பது வே எனது விருப்பம்! நல்ல படங்களை மட்டும் பார்த்து, பார்க்காத மக்களையும் பார்க்கும்படி தூண்டவேண்டும். ஆனல் ஒன்றை மட்டும் உண்மையிலேயே ஒப்புக் கொள்கிறேம். பட உலகத்தால் நல்ல [...]ம் வளர்ந்திருக்கிறது.

அளவுக்கு அதிகமாக ஏழைகள் படத்தைப் பார்க்கிருர்கள். ஏழைகள் தம்மை மறந்து, இன்னல் துறந்து வீற்றிருக்கும் இடம் திரைப்படக் [...]ட்டகைதான். இதை [...]ம் ஒரு போதும் ம[...] விடமாட்டோம். அவர்க[...]ப் படம் பார்க்கவேண்ட[...]ம் என்று நான் கூறவில்லை.

அளவுக்கு அதிகமாகப் படம் பார்ப்பதை, சிறிது குறைத்துக் கொள்ளலாம் என்றுதான் கூறுகிறேன். பகலிலே நடைபெறும் படக் காட்சிகளைப் பார்ப்பது தீமை பயப்பதாகும். எனவே திரைப்படம் பார்ப்பவர்கள் இரவில் பார்ப்பது நல்லது என்று திருச்சி தமிழ்ச்சங்கக் கூட்டமொன்றிலே தலைமை வகித்துப் பேசும்போது திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் கூறினார்கள்.


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

**1918-ம் ஆ ஸ்தாபிதமானது**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமாக அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்

Std 14


வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வயிரமுத்து சீனிவாசகம்
சங்கானை மேற்கு
வழக்காளி

இல. M B 1806

எதிராக

தம்பிப்பிள்ளை அப்புத்து[...]
தனது காலஞ்சென்ற மனை
நாகேஸ்வரியின் தத்துவகாரனும்
சுளிபுரம்.

எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிகோட்டின் M B 1806 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் இரு துண்டு காணிகள் 1958 ஞு சித்திரை மீ 12 வ சனிக்கிழமை முற் பகல் 9-30 மணி தொடக்கம் அந்த அந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 2960/- ம் இதற்குத் தீர்வைத 27-8-57 திகதி தொடக்கம் 17-10-58 வரையும் 100 க்கு 9 வீத வட்டியையும் பின் முழுத் தொகையும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 272-75.

காணி விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானை கோயிற்பற்று சுழிபுரம் இறை புலிகுத்திக்காடு நிலப் பரப்பு ஒன்றும் $17\frac{1}{2}$ குழியும் என்னும் நிலப்பரப்பு 7ம் $15\frac{1}{4}$ குழியும் ஆக நிலப்பரப்பு 9 தும் $14\frac{1}{2}$ குழியும் கிணறும் பனைகளும் எல்லை கிழக்கு அப்பாப்பிள்ளை சிவகுருநாதருக்கு உரிய காணி வடக்கு ஒழுங்கை, மேற்கு தம்பிப்பிள்ளை கந்தசாமிக்குரிய ஆதனம். தெற்கு தாமோதரம் நவரத்தினத்திற்கு உரிய ஆதனம், மேற்காட்டிய எல்லைப்படி இது அடங்கலும்.

(2) மேற்படி மூளாய் இறை முன்கொடை கோம்பன் மறுபிரிவும் நிலப் பரப்பு $11\frac{1}{4}$ கிணறுகளும் வடலிகளும் எல்லை கிழக்கு வட்டுக்கோட்டை மேற்கு கிராம எல்லை வடக்கு நாரணபிள்ளை கைம்பெண் பொன்னுச்சிக்குஉரிய ஆதனமும் சிற்றம்பலம் பெண் மாரிமுத்துவுக்கு உரிய ஆதனமும் மேற்கு வயித்தியர் மயில்வாகனத்துக்கு உரிய ஆதனமும். தெற்கு ஆறுமுகம் வயிரமுத்துவுக்கும் பெண் அன்னப்பிள்ளைக்குரிய ஆதனமும் குறித்த கிணற்றில் தெற்கெல்லைக் காணிக்குரிய 1/3 பங்கும் தூர்வை வழி வாய்க்காலும் புறநீங்கலாக மிகுதி அடங்கலும்,

சி. சே. மாரிமுத்து
கொம்மிஷனர்

"விதானை வளவு"
சித்தங்கேணி,
6—3 58.

M 251 21-3-


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர் வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திருப்பனையூர் பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 21-3-58 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org